ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2182/23 - 2020 ජුලි මස 01 වැනි බදාදා - 2020.07.01
**2182/23 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், சங்கானை கிழக்கு J/ 178 கிராம அலுவலர் பிரிவில், சங்கானை கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள காணி யாழ்ப்பாண நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.10.29 ஆந் திகதிய Ya/ CHN/2018/82 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் துண்டு ‘Y’ எனக் காட்டப்பட்ட 0.1517 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு ‘A’ - பற்றங்கடவை - விஸ்தீரணம் : 0.1517 ஹெக்டயார்**

வடக்கு : காணியின் பெயர் தெரியாத இராசையா மனோகரன், பத்மராஜா கோகுலன் மற்றும் சின்னத்தம்பி குமாரசாமி உரிமை கோரும் காணிகள் ; கிழக்கு : காணியின் பெயர் தெரியாத சின்னத்தம்பி குமாரசாமி, பொன்னுத்துரை நேசலிங்கம் மற்றும் மனைவி குணராணி உரிமை கோரும் காணிகள் ; தெற்கு : காணியின் பெயர் தெரியாத பொன்னுத்துரை நேசலிங்கம் மற்றும் மனைவி குணராணி உரிமை கோரும் காணிகள் மற்றும் பொன்னாலை யாழ்ப்பாணம் வீதி ; மேற்கு: பொன்னாலை யாழ்ப்பாணம் வீதி மற்றும் காணியின் பெயர் தெரியாத இராசையா மனோகரன் உரிமை கோரும் காணி.

எஸ். எம். சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி அமைச்சின் குறிப்பு இல. : 4 - 3/11/2016/PT/335.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, மார்ச்சு 12.

07-401